DAY — 03 SEAT NUMBER | | | | | | |

2025	II	13	1100	J-264	(TAM)

TAMIL (09)

Time : 3 Hrs. (16 Pages) Max. Marks : 80

பகுதி-1 : உரைநடை - 18

Q I-அ **பின்வரும் பத்தியைப் படித்துணர்ந்து உரிய விடைகளைத் தருக.** **(6)**

1) வலைபடத்தை பூர்த்திசெய்க. (2)



எழும்பூர், திருவல்லிக்கேனி, புரசை வாக்கம், தண்டையார்ப்பேட்டை, திருவொற்றியூர் முதலிய கிராமங்களும் இணைக்கப்பட்டன. வடசென்னைய பகுதிகள் மதராசப்பட்டினம் என்றும். தென் சென்னைப் பகுதிகள் சென்னைப் பட்டினம் என்றும் வழங்கப்பட்டன. ஆங்கிலேயர் இரண்டையும்

இணைத்து 'மதராஸ் என்று அழைத்தனர். பின்பு அதுவே மெட்ராஸ் ஆகி இ ன்று நம் சென்னையாக ஆகி இருக்கிறது. நடு 1646 -ஆம் ஆண்டின் கணக் கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 19,000 ஆகும். இவ்வளர்ச்சியினை அறிந்கே 1688 இல் சென்னை நகராட்சி உருவாக்கப் பட்டது. ஆங்கிலேயர் ஆட்சி செய்வதற்கு வசதியாகத் தென்னிந்தியாவின் பெரும்பாலான பகுதிகளை உள்ளடக்கிக் சென்னை மாகாணத்தை உருவாக்கினர் 'எலியேல்'. அதன் முதல் தலைவர் ஆனார். அவரைத் தொடர்ந்து 'தாமஸ் பிட்' சென்னை மாகாண தலைவரானார். ஆங்கிலேயரின் அதிகார மையமான இந்நகரம், ஆங்கிலேயரை எதிர்த்த விடுதலை இயக்கத்தாருக்கும் முதன்மைக் களமாகத் திகழ்ந்தது. தாமஸ்பிட் ஆட்சிகாலத்தைச் சென்னை யின் பொற்காலம்.

2) சரியான சொல்லை தேர்ந்தெடுத்து எழுதுக. (2)

i. ஆங்கிலேயர் இரண்டையும் இணைத்து ..... என்று அழைத்தனர்.

(மெட்ராஸ், மதரஸ்)

ii. சென்னை மாகாணத்தின் முதல் தலைவர் .....

(தாமஸ்பிட், எலியேல்)

iii. ..... ஆட்சிக்காலத்தை சென்ணையின் பொற்காலம்.

(எலியேட், தாமஸ்பிட்).

iv. 1646 -ஆம் ஆன்டின் கணக்கெடுப்பின்படி நகான் மக்கள்தொகை ..... ஆகும்.

(19,000, 20,000)

3) உனக்குத் தெரிந்த நகரத்தின் சிறப்பைப் பற்றி எழுதுக ? (2)

Q I -ஆ பின்வரும் பத்தியைப் படித்துணர்ந்து உரிய விடை தருக. **(6)**

1) வலைபடத்தை பூர்த்தி செய்க. (2)



இயற்கையை போற்றுகிற சமூகமாக தமிழ்ச் சமூகம் என்றைக்கும் இருந்து வருகிறது. இயற்கையானது சமநிலையோடு இருந்தால்தான் அந்தந்த பருவ நிலைக் கேற்ப நிகழ்ச்சிகள் நடக்கும். மாறாக அது சமநிலையை அழைக்கும்போது இயல்பான பருவ நிலையில் மாற்றம் ஏற்படுகிறது. இதன் காரணமாக புயல், பெருமழை, பெருவெள்ளம்,. புவி வெப்பமாதல் உள்ளிட்ட மாறுபட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றன. மனிதன் தன் பேராசை காரணமாக வளங்களை கடுமையாக சேதப்படுத்திய தன் உறவை இன்றும் சந்தித்துக் கொண்டிருக்கிறான். இங்கிலாந்தை சேர்ந்த அறிவியல் கருத்தாளர் டேவிட் கிங் புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கல் என்று திட்டவட்டமாக கூறுகிறார். ஆர்டிக் பகுதி கடந்த 30 ஆண்டுகளில் நான்கு இலட்சம் சதுர மைல்கள் உருகி உள்ளது இதற்கு புவி வெப்பமாதலை காரணமாகும்.

2) **கோடிட்ட இடத்தை நிரப்புக.** (2)

i. இயற்கையானது ..... இழுக்கும் போது இயல் பான பருவநிலையில் மாற்றம் ஏற்படுகிறது.

ii. புவி வெப்பம் வெப்பமடைதல் மனிதன் உருவாக்கித் கொண்ட சிக்கலே என்று. கூறியவர் .....

iii. இயற்கையை போறாறுகிற சமூகமாக ..... என்றைக்கும் இருந்து வருகிறது.

iv. ஆர்டிக் பகுதி கடந்த 30 ஆண்டுகளில் ..... இலட்சம் சதுரமைல்கள் உருகி உள்ளது.

3) **சுற்றுப்புறத் தூய்மை பற்றிய உனது கருத்தை எருதுக.** (2)

Q I - இ **பின்வரும் பகுதியைப் படித்துணர்ந்து உரிய விடை தருக.** **(6)**

1) வலைபடத்தை பூர்த்திசெய்க. (2)



சின்னப்பிள்ளை டெல்லியில் விருது வாங்கும்போது, மதுரைச் சின்னப்பிள்ளைன்னு கூப்பிட்டவுடனே என் கண்ணுலேர்ந்து கண்ணீரே வந்துருச்சு. நாட்டுக்கே பெரிய தலைவர் அவரு, விருதைக் குடுத்துட்டுப் பொசுக்குனணு எங்கால்ல விழுந்துட்டாரு. எனக்கு மேலுகாலெல்லாம் ஆடிபோச்சு. நான் போயிட்டு வாரேன்! நம் நாட்டு நடுவன் முதன்மை அமைச்சராக இருத்த மாண்பு மிகு, வாஜ்பாய் அவர்களின் கைகளால் பென் ஆற்றல் விரு . ஸ்த்ரீ சக்தி புரசஸ்கர், ஒளவை விருது. பொதுகை விருது, தாமரைத்திரு விருது ஆகிய விரு களை பெற்றார்.

இன்னும் மகளிரின் வாழ்வு மேற்படத் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றார் சின்னப்பிள்ளை. இவர் முதலில் பெண்கள் எல்லாம் குழுவாச் சேர்த்து விவசாய நிலத்தைச் குத்தகைக்கு எடுத்து கூலி வேலைக்கு ஆட்கள் சேர்த்து, நடவு, களையெடுப்பு அறுவடை போன்ற வேலைகளைச் செய்தார். அவங்க கிடைக்குற கூலியை எல்லாருக்கும் கனிசமாகப் பிரித்துகொடுத்தார்.

2) கீழ்கண்ட தொடர்கள் சரியா ? தவறா ? என கண்டறிந்து எழுதுக. (2)

i. விவசாய நிலத்தைக் குத்தகைக்கு எடுத்தார்.

ii. கூலி வேலைக்கு ஆட்களை சேர்க்கவில்லை.

iii. வாஜ்பாய் அவர்களின் கைகளால் விருது பெற்றார்.

iv. டெல்லியில் விருது பெற்றார்.

3) நீ அறிந்த சாதனை படைத்தவர்கள் பற்றி எழுது ? (2)

பகுதி-II : செய்யுள் - 16

Q II - அ பின்வரும் பாடலை படித்துணர்ந்து பாடலின் தலைப்பு, ஆசிரியர் பெயர், பாடலின் மையக்கருத்து, பாடலின் திரண்டக் கருத்து, பிடித்த வரிகள், பிடிக்கக் காரணம் இவற்றை எழுதுக. **(8)**

காய்நெல் அறுத்தும் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்,
நூறுசெறு ஆயினும், ததிமித்துப்புக்கு உண்னே,
வாய்புகுவதனினும் கால்பெரிது செடுக்கும்.

அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே
கோடியாத்து, நாடு பெரிதுநந்தும்
மெல்லியன் கீழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொரு
பிரிவுதீப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான், உலகமும் கெடுமே.

Q II - ஆ கீழ்வரும் செய்யுள் பகுதியை படித்துணர்ந்து வினாக்களுக் குரிய விடை தருக. **(8)**

1) வலைப் படத்தை பூர்த்தி செய்க. (2)



ஓர் ஆனந்தம்
சற்றுமனச் சேர்வு
சிறிது அற்பத்தனம்
நொடிப்பொழுதேயான விழிப்புணர்வு
எதிர்பாராத விருந்தாளிகளாக.
அவ்வப்போது வந்துசெல்லும்.
எல்லாவற்றையும் வரவேற்று.
விருந்தோம்பு1
துக்கங்களின் கூட்டமாக அவை
கருந்து உனது நட்டைத்
துப்புரவாக
வெறுமைப் படுத்தும் போதும்
ஒவ்வொரு விருந்தினரையும்

கௌரவமாக நடத்து.
புதியதோர் உவகைக்காக
அவை உன்னை
தூசிதட்டித் தயார்படுத்தக்கூடும்.
வக்கிரம்
அவபாணம்
வஞ்சனை
இவற்றை வாயிலுக்கே செண்று
இன் முகத்துடன்
வரவேற்பாயாக.

2) **உரிய எழுத்தை தேர்ந்தெடுத்து எழுதுக.** (2)

i. ஓர் ஆ ..... ந்தம். (ன/ந)

ii. ஒவ்வொரு விருந்தினரையும் கௌ.....(ர/று)வமாக நடத்து.

iii. தூசிதட்டித் தயார் படுத்தக்..... (கு/கூ)டும்.

iv. இவற்றை வாயி.....(ஞ/லு)க்கே சென்று வரவேற்பா யாக.

3) **எதிர்ச்சொல் தருக.** (2)

i. அவை X

ii. புதிய X

4) **உனது வீட்டிற்கு வந்த விருந்தினரை நீ உபசரித்த்தை பற்றி கூறு.** (2)

பகுதி-III : துணைப்பாடம் - 12

QIII - அ **கீழ்காணும் வினாக்களுக்கு விடை தருக.** **(4)**

1) சாலைப் பாதுகாப்பு என்றால் என்ன ? (1)

2) முத்தையன் தன் தம்பியை எவ்வாறு வளர்த்தான் ? (1)

3) "கோடை மழை" என்ற துணைப்பாட ஆசிரியர் பெயர் மற்றும் அதில் உள்ள கதாபாத்திரங்களின் பெயர் எழுதுக. ? (2)

QIII - ஆ பின்வரும் பகுதியைப் படித்துணர்ந்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக. **(8)**

தலைக்குளத்திலிருந்து வீடு சற்றுத் தொலைவில், வேனில் காலங்களில் வீட்டுக் கிணற்றில் தண்ணீர் வற்றுவதே இல்லை. இறைக்க இறைக்கப் பொங்கும் முக்காலே மூன்டானி கிணற்றிலும் தன்னீர் அடிபற்றி இருக்கும். சில கிணறுகள் வரண்டு போய் இருக்கும். அவர்களுக்கெல்லாம் எங்கள் வீட்டு கிணற்றைப் பார்த்து பொறாமை. உங்கள் விட்டுக் கினற்றுக்குத் தலைக்குளத்து ஊற்று என்பார்கள். இதை கேட்கும் போது அந்தக்குசும்புக்கார்கள் மீது உம்மாவுக்கு வேசாடையாக இருக்கும். தலைகுளத்து ஊற்று என்பதில் உன்மை இல்லாமல் இல்லை. மழைக்காலங்களில் தலைக்குளத்துத் தண்ணீர், கலங்கலாக இருக்கும்போது எங்க வீட்டு திணற்று தண்ணீரும் கலங்கலாகத்தான் இருக்கும். ஆனால் ருசி குறைவாக இருக்காது. இன்று மினரல் வாட்டர் கேன் வாங்கித் தாங்கல. "ஊரில் பழைய ஒரு ஓட்டு வீடும் சுத்தத் தன்னீர் கிடைக்கும் கினறும் சும்மா கிடக்குடா, அங்கு போய்த் தங்குவோம்" என்று பிள்ளைகளிடத்தில் சொன்னால் சீறுவாற்கள்..

வினாக்கள் :

i. கிண்றைப் பற்றிய அவர் கூறும் பெருமையை எழுதுக ? (2)

ii. அவர்களுக்கெல்லாம் எங்கள் வீட்டு கிணற்றுக்கு என்ன பெயர் வைத்தர்கள் எண்று கூறினார் ? (2)

iii. மழைக் காலங்காளில் கினறு எவ்வாது இருப்பதாக கூறுகிறார்? (2)

iv. உனது ஊரில். அல்லது உனது தோட்டத்திள் உள்ள கிணற்றைப் பற்றி எழுதுக? (2)

பகுதி-IV : இலக்கணம் - 16

Q IV **கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1) **வேற்றுமை உறுப்பு கண்டறிந்து எழுதுக** (2)

i. கண்ணனுக்குக் கொடுத்தான்.

ii. குகனது வீடு.

2) **தன்வினையா பிறவினையா எனக் கண்டறிந்து எழுதுக.** (2)

i. இயல்விழி மாலை தொடுத்தாள்.

ii. தச்சன் நாற்காலி செய்வித்தான்.

3) **அடைப்புக்குறிக்குள் கொடுத்தவாறு மாற்றுக** (2)

i. ஆசிரியர் புத்தகத்தை எழுதினார்
(செயற்பாட்டு வினையாக மாற்றுக).

ii. புல் பசுவால் மேயப்பட்டது.
(செய்வினையாக மாற்றுக)

4) **வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** (2)

i. மகிழ்ச்சியாக.

ii. இன்றியமையாத.

5) **உவமையா ? உருவகமா ? எனக் கண்டறிந்து எழுதுக.** (2)

i. இறைவனின் "அடிமலர்" தொழுதேன்.

ii. மலர்மொழி அமுதமொழி பேசினாள்.

6) **தனி வாக்கியமா ? தொடர் வாக்கியமா ? கலவை வாக்கியமா? எனக் கண்டறிந்து எழுதுக.** (2)

i. திவ்யா பாடம் படித்தாள்.

ii. பொது அறிவு நூல்களைத் தேடி படித்தார், போட்டி தேர்வில் வெற்றி பெற்றார்.

7) **கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தில் பெயர்ச் சொல், பிரதி பெயர்ச்சொல் கண்டறிந்து எழுதுக.** (2)

i. பாரதியார் நம் தேசியகவி; அவர் பாஞ்சாலி சபதத்தை இயற்றினார்.

8) **அடைப்புக்குறிக்குள் கொடுத்தவாறு மாற்றுக.** (2)

i. திவ்யா நன்றாகப் பேசுவாள்

(வினா வாக்கியமாக மாற்றுக)

ii. தினந் தோறும் காலையில் பாடம் படிக்க வேண்டும்.
(கட்டளைவாத்தியமாக மாற்றுக)

பகுதி-V : எழுத்துத்திறன் - 18

QV - அ **கடிதம் வரைக.** (4)

உன் சகோதரியின் திருமணவிழாவில் கலந்து கொள்ளுமாறு நன்பன்/தோழிக்கு ஒரு கடிதம் எழுதுக.



அல்லது

உன் பகுதியில் மின்சார வசதி செய்துதர வேண்டி மின்சாரவாரிய அலுவலகத்திற்கு ஒரு விண்ணப்பம் கடிதம் வரைக.



QV - ஆ **நேர்காணல்.** (4)

தொழில் அதிபர் முகேஷ் அம்பாணியிடம் நேர்காணல் செய்ய எட்டு வினாக்களை தயார் செய்க.

QV - இ **குறிப்புகளை பயன்படுத்தி கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒந்றிற்கு கட்டுரை வரைக.** (6)

1. தீபாவளி பண்டிகை பற்றி விளக்குக.



அல்லது

2. சிறுசேமிப்பு பற்றி எழுதுக



QV - ஈ **பழமொழிகளை விவரித்து எழுதுக.** (4)
(எதேனும் 1 மட்டும்)

1. ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.

2. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

அல்லது

கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தை மொழி பெயர்த்து எழுதுக.

1. Little strokes fell great oaks.

2. A friend in need is a friend indeed.

3. Food is essential for all living things.

4. Empty vessels make the greatest sound.

◆◆◆